**தேயிலை ஆராய்ச்சி சபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தின் சீராக்கங்கள், மிகை ஐயக் கடன் ஒதுக்கீடுகள், வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள், கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் அட்டுறு செலவினங்கள் ஆகிய மீதிகளின் விலகல்களின் கூட்டுத் தொகையான ரூபா 1,815,863 இலக்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள | காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது 2018 ஆம் ஆண்டில் ரூபா 19,168 மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 20,674 ஆகியவற்றிக்கு இடையே ஆக வேறுபாடு ரூபா 15,000 ஆக காசுப் பாய்ச்சல் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த வழுவினை 2019 ஆம் ஆண்டின் பற்றாக்குறையான ரூபா 151,170 இற்கு சீராக்கியமையால் காசுப் பாய்ச்சல் கூற்றின் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| விதிகளுக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய பற்றாக்குறை ரூபா 151,157 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் அட்டுறு வட்டி வருமான பெறுவனவுகள் மற்றும் அறவிட முடியாக் கடன் மிகை ஒதுக்கீடு சீராக்கப்பட்டமையால் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் வேறுபாடானது ரூபா 1,403 ஆயிரம் ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. அட்டுறு செலவினங்களினுள் நானாவித கடன் கொடுத்தோர் மீதிகள் மற்றும் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினங்களினுள் அட்டுறு செலவின மீதிகள் சில ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்டமைக்கு இந்த வேறுபாடு காரணமாக அமைந்திருந்தது. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பேரூந்து ஒன்று 2017 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பேரூந்து மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனம் ஒன்றாக 2018 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் மற்றும் மீள் மதிப்பீடு ஒதுக்கம் அந்த அளவினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வினாவில் குறிப்பிடப்பட்ட பேரூந்து 2017 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், அதற்குரிய கணக்கு பதிவுகள் சரியாக அந்த வருடத்திலேயே கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எனினும், 2015 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் 2018 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்க நேர்ந்தமையால் 2015 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பேரூந்து மீளவும் 2018 ஆம் ஆண்டின் போது பேரேட்டுக் கணக்குகளில் | கைத் தவிர்க்கப்பட்ட சொத்தின் பெறுமதியை மீள கணக்கு வைத்தல் திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த வழுவினை 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மத்துகம பொது அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் இலங்கை தேயிலைச் சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று ரூபா 2,000,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனத்தின் உரித்தினை உறுதிப்படுத்தி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டில் மற்றும் கடந்த வருடங்களில் இந்த வாகனத்தின் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினமான ரூபா 990,050 தொகை மூலதனமாக்கப்பட்டுள்ள அந்த பெறுமதியின் அடிப்படையில் ரூபா 40,214 பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உயர் பெறுமதியுடனான வாகனங்களின் மீள் நிருவல் செலவினம் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் 2015 ஆம் ஆண்டில் இந்த வாகனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மீள் நிருவல் செலவினத்தை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த வாகனத்தை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையேற்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | வாகனத்தை சபைக்கு உரித்தாக்குதல், அதனை கணக்கு வைத்தல் மற்றும் மூலதனமாக்கப்பட்ட வருமானச் செலவினங்களை அகற்ற வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 8,700,272 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 2,436,076 வருமான வரிக்காக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிவல்லை. | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி எதிர் காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இந்த வட்டி வருமானத்தின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் வரி செலுத்தப்பட்டுள்ளது. | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரி கணக்கு வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது தலவாக்கலை புனித கும்பஸ் தோட்டத்தின் மற்றும் அந்த தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 706,127 நிதிக் கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அந்த தோட்டத்தில் | ரூபா 706,127 தொகையான பெறுமானத் தேய்வுகளுக்குரிய சீராக்கங்கள் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வினை குறைத்து கணிப்பிடப்பட்டமையை திருத்துவதற்கு நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | Save the children செயற்திட்டத்திற்கு உரிய நிர்மாணங்கள் கடந்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் கிரயமான ரூபா 1,583,587 ஆன தொகை மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | Save the Children செயற்திட்டத்தின் பெயரில் நடைமுறை வேலையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,583,587 தொகைக்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தோட்ட அலுவலகத்தில் உள்ளதுடன், அந்த செலவினங்கள் 2020 ஆம் ஆண்டின் போது மீள் சொத்துக்களாக மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைப் பெறுமதி பொறியியலாளரின் சான்றுதழின் அடிப்படையில் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (உ) | தேயிலை தயாரிப்பதற்காக சபையினால் 1982 ஆம் ஆண்டின் போது ரூபா 4,142,173 செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் குறித்த செயற்திட்டத்திற்கு பொருந்தாதிருந்ததுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரங்களின் பெறுமதியினை திறைசேரியின் அங்கீகாரத்துடன் புத்தகங்களில் இருந்து பதிவலிக்குமாறு 2014 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகளுக்கான பாராளுமன்ற கணக்குகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த இயந்திரங்களின் பெறுமதி நடைமுறை வேலையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2014 நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம் பெற்ற COPE குழு கூட்டத்தின் போது 1982 ஆம் ஆண்டில் ரூபா 4,142,173 செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படாதுள்ள இயந்திரத்தின் பெறுமதியினை புத்தகங்களில் இருந்து பதிவலிப்பதற்காக பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ள போதிலும் அந்த அனுமதி இது வரை கிடைத்திருக்காததுடன், அந்த பெறுமதியினை பதிவலிப்பதற்காக அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரத்தினை கோரி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் தொடர்பிலான பாராளுமன்ற செயற்பாட்டு குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 2,381,613 பெறுமதி கொண்ட கற்புலச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த புனித கொண்டஸ் தோட்டத்தின் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கற்புல சொத்துக்களில் ISO தரச் சான்றிதழுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவின விபரங்கள் 15 வருடங்களை விட பழமையானது என்பதால் அந்த விபரங்களை தேடிக் கண்டறிய முடியாதுள்ளது. அதன் காரணமாக இவற்றை கணக்குகளில் இருந்து பதிவலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரித்தினை சான்றுபடுத்துவதுடன் தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக புனித கூம்பஸ் தோட்டத்திற்கு இலங்கை தேயிலைச் சபை பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களில் இருந்து ரூபா 1,655,762 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் பெற வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே புனித கூம்பஸ் தோட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டிலான நலிவுகள் காரணமாக 2017 ஆம் ஆண்டில் இடம் பெற்றிருந்த ரூபா 10,423,378 ஆன நிதி மோசடியொன்று கடன் பட்டோர் மீதியினுள் காணப்படுகின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலைச் சபை, பொருந்தோட்ட அமைச்சு மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தோட்ட அதிகார சபைக்கு அறிவவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>நிதி மோசடியால் இழக்கப்பட்ட பணத்தை அறவிடுவதற்காக ஆரம்ப விசாரனைகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்து உரிய நடவடிக்கைகளை அந்த திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | பெற வேண்டிய பணத்தை துரிதமான அறவிடுவதற்கும் நிதி மோசடி தொடர்பிலான விசாரனையை தாமதமின்றி நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நி.பி.571(3) | 2 வருடங்களை கடந்த ரூபா 524,685 பிடி காசு தொடர்பில் நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடி காசினை எதிர் காலத்தில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினரை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரித்தினை தாமதமின்றி சான்றுப்படுத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முடியுமாயின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிற்கடமை வழங்கப்பட வேண்டியது நிரந்தர நியமனமொன்று வழங்கப்படும் வரை தற்காலிக அடிப்படையிலேயே ஆன போதிலும், சபையின் சிரேஷ்ட கணக்காளர் பதவி மற்றும் பிரிவு தலைவர் பதவிகள் 04 ஆகியவற்றுக்காக 3 முதல் 7 வருடங்கள் வரை நிரந்தர நியமன் ஒன்றை வழங்காது தற்காலிக பதிற்கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,106,814 பதிற்கடமை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | சிரேஷ்ட கணக்காளர் பதவியினை நிரப்புவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் பத்திரகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும், தகைமை வாய்ந்த விண்ணப்ப தாரிகள் முன்வராமையால் மீளவும் 2020 செப்டம்பர் 22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சிரேஷ்ட கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பொருந்தோட்ட அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.<br><br>பிரிவுத் தலைவர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புகளுக்கு உள்ளக ரீதியாக விண்ணப்பங்களை கோரி நேர்முக பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன், அதன் போது தகைமை வாய்ந்த இரு உத்தியோத்தர்கள் மாத்திரம் நேர் முகப் பரீட்சை குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்காக பொருந்தோட்ட | ஸ்தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், துரிதமான ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சிற்குரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக தேயிலை ஆராய்ச்சி சபையினால் பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான சபையினால் ரூபா 78,598,000 குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரிய அமைச்சரதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2008 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது | நிதி அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப்பட்ட தேயிலை ஆணையாளரின் TC/RT/CIR/2015/11 மற்றும் 2015 திசெம்பர் 23 ஆம் திகதிய சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் பங்கசுக்கள் மற்றும் ஈரலிப்பில் பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றப்பட்ட தேயிலை பொதி செய்யப்பட்டு கொள்கலனில் அடைக்கப்பட்டு களஞ்சியப்படுத்தல், ஈரலிப்பு உறிஞ்சப்படாத பொதிகளை பயன்படுத்துவதன் பயன்படுத்த வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அகற்றப்பட்ட தேயிலை புனித கூம்பஸ் தேயிலை தொழிற்சாலை வளாகத்தின் ஒரு மூலையில் குவிக்கப்பட்டிருந்தது. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) அகற்றப்பட்ட தேயிலையின் இருப்பினை அகற்றும் போது முதலில் உற்பத்தி செய்யப்படும் அகற்றப்பட்ட தேயிலையை முதலில் விநியோகிக்கும் FIFO முறைமை பின்பற்றுதல் இலகுவான முறையில் | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உற்பத்தி பிரதிகளின் பிரகாரம் அகற்றப்பட்ட தேயிலை களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய போதிலும், புனித கூம்பஸ் தேயிலை தொழிற்சாலையின் அகற்றப்பட்ட தேயிலை இருப்பானது இந்த விதிகளுக்கு முரணாக முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது

**2. நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 152,304,330 ஆன பற்றக்குறை ஆனதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 63,542,018 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 88,762,312 ஆன பற்றாக்குறையிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 140 சதவீதம் ஆகும். புனித கூம்பஸ் தோட்டத்தில் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 200 சதவீத பற்றாக்குறையொன்று நிலவியமை மற்றும் புனித ஜோக்கின் தோட்டத்தின் மீளாய்வாண்டின் போது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 54 சதவீத பற்றாக்குறையொன்று நிலவியமை இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமலித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விஷேட செயற்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி பணிகளுக்காக ரூபா 14,030,854 செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Walk in type Environmental Facility எனும் பெயருடைய உபகரணம் இரு வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த உபகரணத்தின் நிறுவுதல், ஒப்படைத்தல் மற்றும் செயற்பாடு எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமையின் அடிப்படையில் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்த முடியாததாக காணப்பட்டது. | உபகரணத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு நிறுவுதல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத காரணத்தால் அந்த நிறுவனங்கள் தொடர்பில் அமைச்சு மற்றும் அதனுடன் சேர்ந்து தேயிலை ஆராய்ச்சி சபை சட்ட ரீதியான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. | சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நட்டத்தினை அறவிட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை ஆராய்ச்சி சபைக்குரிய 5 வாகனங்களுக்கு உரிய வாகன பதிவு மூலப் பிரதிகள் இல்லையென்பது அவதானிக்கப்பட்டது அவற்றுள் 3 வாகனங்கள் சபையின் கராஜுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பழுது பார்த்தல் பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தால் அவற்றை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. | **வாகன இலக்கம்** - **பதிவு சான்றிதழின் மூலப் பிரதி காணப்படவில்லையா என்பது**<br>32 Sri 1806 - காணப்படவில்லை<br>32 Sri 3467 - காணப்படவில்லை<br>32 Sri 5991 - காணப்படவில்லை<br>253-1215 - காணப்படவில்லை<br>72 Sri 7900 - காணப்படவில்லை | மோட்டார் வாகன திணைக்களத்திடம் கோரி பதிவுச் சான்றுதழை பெற்றுக் கொள்ள வேண்டும். விளைவற்று காணப்படும் வாகனங்களை ஓட்ட நிலைமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வலகன்துவ, தெனியாய மற்றும் கொட்டாவ பிரதேச அலுவலகங்களில் ரூபா 72,031,804 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளின் உரித்து அரசுக்கு அல்லது அரச நிறுவனங்களிடம் இருந்து சபைக்கு கையேற்பதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமான 10 வாகனங்கள் ரூபா 11,232,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், தேயிலை ஆராய்ச்சி சபைக்கு அவற்றின் உரித்து மாற்றப்பட்டிருக்கவில்லை. | தெனியாய காணி தலவாக்கலை தோட்டக் கம்பனிக்கு சொந்தமான காணப்படுவதுடன், அதன் உரித்தினைக் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கொட்டாவ காணிக்காக 30 வருட நீண்ட கால குத்தகை ஒப்பந்தமொன்றை வழங்குவதற்குரிய அனைத்து ஆவணங்களும் யக்கலமுல்லை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் அனைத்து ஆவணங்களும் தென் மாகாண காணிகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வலகந்துவ காணி அரச பொருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாவதுடன், அதன் உரித்தினை சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. அவ்வாறே இலங்கை தேயிலைச் சபையின் பெயரில் உள்ள வாகனங்களை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சுவீகரிப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. | நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் வாகனங்களின் உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தலவாக்கலை புனித கூம்பஸ்ட் தோட்டத்தில் கொழுந்து பரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த வேலை நாட்களின் எண்ணிக்கை 50,155 ஆக போதிலும், அதனை விட கூடுதலான நாட்கள் அதாவது, 58,116 வேலை நாட்கள் உரவிடுவதற்கு, கிருமி நாசினி தெளித்தல் மற்றும் கௌவாத்து வெட்டுதல், புல் வெட்டுதல் போன்ற பல்வேறு பணிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது, தொழிலாளர்களுக்கு குறித்த பணிகளுக்கு உரிய மேற்பார்வையொன்று இல்லாதிருந்தமையால் செலவின முகாமைத்துவம் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் காரணமாக கடந்த வருடத்தில் ரூபா 29,444,834 மிகையொன்றினை காண்பித்த இந்த தோட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 29,548,466 ஆன பற்றாக்குறை ஒன்றினை பதிவு செய்திருந்தது. அது கடந்த வருடத்தின் நிதி விளைவிற்கு ஒப்பாக 200 சதவீத வீழ்ச்சியாகும். | புனித கூம்பஸ் தோட்டத்தின் முன்னால் தோட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரனையொன்று மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான வழக்கொன்று காணப்பட்டமையால் 2018 ஆண்டின் செப்டம்பர் மாதம் முதல் இது வரை முழு நேர தோட்ட உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்ள முடியாதிருந்ததுடன், அதற்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு சொந்தமான புனித ஜோக்கின் தோட்டத்தில் முழு நேர தோட்ட உத்தியோகத்தர் புனித கூம்பஸ் தோட்டத்தில் பணியினை மேவுகை செய்வதற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார். இதன் காரணமாக அந்த தோட்ட அதிகாரிக்கு வாரமொன்றில் சில தினங்கள் மாத்திரம் புனித கூம்பஸ் தோட்டத்தின் பணிகளினை மேவுகை செய்கின்றமையால் தேயிலை கொழுந்து பறித்தல் மற்றும் ஏனைய பணிகளை முழுமையான மேற்பார்வையின் கீழ் செயற்திறனாக மேற்கொள்ள முடியாதிருந்தது. 2019 ஆகஸ்ட் மாதம் புதிய உதவி தோட்ட உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் முன்னால் தோட்ட உத்தியோகத்தருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரனை மற்றும் வழக்கு பணிகள் நிறைவு செய்யப்பட்டு அவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். புதிய முழு நேர தோட்ட உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்ள உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | பொருத்தமான மேற்பார்வையின் அடிப்படையில் கிரய முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டு செயலாற்றல் அதிகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான இரத்தினபுரி ஜோகின் கைத்தொழிற்சாலையின் வருடாந்த உற்பத்தி இயலளவு 1,020,000 கிலோ கிராம் ஆன போதிலும், மீளாய்வாண்டின் போது | புனித ஜோகின் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உட்படாத விடயங்களின் காரணமாக கடந்த வருடங்களுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது தோட்டம் நட்டமடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது பெறுமானத் தேய்வு ரூபா 536,586 இனால் அதிகரித்தமை | தொழிற்சாலையில் நிலவும் உற்பத்தி இயலளவினை பயன்படுத்தி உற்பத்தி கிரயத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| அது 72 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அது தேயிலையின் ஒரு கிலோ ஒன்றினுள் உள்ளடக்கப்படும் நிலையான கிரயம் விஞ்சப்பட்டமைக்கும் இறுதித் தேயிலை கிலோ ஒன்றின் உற்பத்திக் கிரயம் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்திருந்தது. | மற்றும் தொழிலாளர் சம்பளங்கள் அதிகரித்தமை உற்பத்திக் கிரயம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது. மேலும் புனித ஜோகின் தோட்டத்தில் நிலவும் தொழிற்படு மூலதன பற்றாக்குறை தொழிற்சாலையில் உள்ள இயந்திர உபகரணங்களின் நலிவுகள் காரணமாக குறை இயலளவுடன் தொழிற்சாலையை நடாத்துவதற்கு நேர்ந்திருந்தது. |

## 3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினபுர புனித ஜோகின் தோட்டத்திற்கு உரிய மொத்த நிலப்பரப்பும் 141.98 ஹெக்டேயர்களாக காணப்பட்டதுடன், அவற்றுள் தேயிலைப் பயிர்ச் செய்கை மற்றும் தாய் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவோ 53.99 ஹெக்டோயர்களாக காணப்பட்ட போதிலும், அவற்றுள் 32.79 ஹெக்டேயர் பரப்புடைய காணி மீள தேயிலை பயிரிடப்படாது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், தோட்டத்தில் 8.74 ஹெக்டேயர்கள் வரை வியாபித்திருந்த வயலுடனான காணிகள் குத்தகை விவசாயிகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வயல்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பல வருடங்களாக சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | தற்போது நிலவும் பயிர் செய்கைகள் பழைய தேயிலை என்பதுடன் தேயிலைக் கன்றுகள் வாடிய காரணத்தால் தேயிலைக் கொழுந்து வருமானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய தேயிலை பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலத்தின் அளவு குறைவடைந்துள்ளது. எவ்வாறு எனினும், மூலதன நிதி ஏற்பாடு இல்லாதிருந்த காரணத்தால் பயிர் செய்கை பணிகள் மீண்டும் பல வருடங்களாக மேற்கொள்ள முடியாதிருந்தது.<br><br>2003 ஆம் ஆண்டின் பின்னர் குத்தகை விவசாயிகளினால் தோட்டம் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு கொடுக்கப்பட வேண்டிய குத்தகைப் பங்கினை வழங்கியிராததுடன், இது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க கமநல சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | தோட்டத்திற்கு சொந்தமாக விளைவற்று காணப்படும் காணிகளை பயன்படுத்துவதற்கு மற்றும் பயன்படுத்த மற்றும் பெற வேண்டிய வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |